[2010 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

12—

தேசிய சட்டக் கல்லூரி

***102981—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க மத்திய அரசிடம் வலியுறுத்துவதன் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சட்டக் கல்லூரிகள் துவக்க வலியுறுத்தும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பெங்களூரு, கொல்கத்தா, ஹைதராபாத் போன்ற நகரங்களில் எல்லாம், அந்தந்த மாநில அரசுகள் தேசிய கல்லூரிகளைத் துவக்கலாம் என்று ஒரு சட்டத்தை இயற்றி, அவை தன்னாட்சி பெற்ற அமைப்புகளாக, அரசியல் குறுக்கீடு இல்லாத ஒரு அதிகார அமைப்புகளாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுபோல் ஏன் தமிழ்நாட்டிலே கொண்டு வரக்கூடாது? அதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 காரணங்களால் நாம் அந்த National Law School-ஐ வற்புறுத்தவில்லை. முதல் காரணம், நம்முடைய டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திலேயே, School of Excellence in Law என்ற ஒரு பிரிவை உருவாக்கி, National Law School-இல் இருக்கிற அந்த standard-க்கு இதை உயர்த்தி, இப்போது நாம் அதை நடத்திக்கொண்டு இருக்கிறோம். National Law School students--உடன், நம்முடைய மாணவர்களும் பங்கு பெறுவதிலேயும், போட்டி போடுவதிலேயும், சமமாக இருக்கிறார்கள். வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திலும் அவர்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. நம்முடைய பல்கலைக்கழகத்திலே School of Excellence-இல் படித்தவர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆகையால் அது ஒரு காரணம். எனவே, தேவையில்லாமல் இன்னொன்றைக் கொண்டுவந்து அதற்குச் செலவு செய்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது ஒன்று.

இரண்டாவது, அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், School of Excellence-ல் Chancellor-ஆக இருக்கக்கூடியவர் நம்முடைய கவர்னர். ஆனால் National Law University அல்லது தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு Chancellor, நம்முடைய High Court நீதிபதிதான். நம்முடைய யூனிவர்சிட்டியிலேயே School of Excellence செயல்படுகிறது. ஒரு தனி யூனிவர்சிட்டியாகத்தான் National Law School-ஐ மாற்ற வேண்டும். மாணவர்களைச் சேர்க்கிறபோது இங்கே Entrance Test-ஐ abolish செய்து இருக்கிறோம். ஆனால் அந்த National Law School-இல் Entrance Test வைத்துதான் சேர்ப்பார்கள்.

மூன்றாவது, ஆசிரியர்களைச் சேர்க்கிறபோது, நாம் சில இடங்களில் Communal G.O. என்றெல்லாம் பார்க்கிறோம். ஆனால், அங்கு அதை எல்லாம் பார்க்க மாட்டார்கள். Merit-ல் மட்டும்தான் எடுப்பார்கள். மேலும், All Over India-வில் இருந்துதான் students, staff-ஐ recruit செய்வார்கள். நம் ஊர் மாணவர்களை அதிகமாக சேர்க்கமாட்டார்கள். எனக்குத் தெரிந்த 14 Law School-களில் அப்படி நடக்கிறது. முதலமைச்சர் ஒரு முறை சொன்னார், அவ்வளவு செலவு செய்து, நிலம் கொடுத்து, பணம் கொடுத்து National Law School ஆரம்பித்த பிறகும், அந்த மாநிலத்தைச்

[2010 ஏப்ரல் 6

சேர்ந்த மாணவர்கள் 9 பேர்தான் சேர்ந்தார்கள் என்று. ஆக 80 பேர் படிக்கக்கூடிய ஒரு இடத்தில் 9 பேர்தான் அந்த மண்ணின் மைந்தர்கள் சேர முடிந்தது. ஆனால், அப்படியல்ல நம்முடைய School of Excellence-இல். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் நிறைய பேர் படிக்கிறார்கள். இரண்டாவது, அங்கே fees எல்லாம் அதிகம்; ஒரு இலட்சம் ரூபாய் ஒரு மாணவனுக்கு என்று. ஆனால், நாம் இங்கு ரூ.40,000 ரூபாய்தான் வாங்குகிறோம். Degree என்றால் அங்கேயும் B.A., B.L., (Hons.) தான்; இங்கேயும் B.A., B.L., (Hons.) தான். எனவே, எல்லா வகையிலும் National Law School-க்கு இணையாக School of Excellence in Law-வை அம்பேத்கர் பல்கலைக்கழகத்திலே நாம் நடத்துகின்ற காரணத்தால், தனியாக ஒன்றைப் பெற வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் School of Excellence in Law என்று வைத்திருக்கிறோம். ஆனால் fees அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள், அதோடு அது autonomous body அல்ல. அதனால்தான் நம்முடைய மாணவர்கள் எல்லாம் கர்நாடாகவிற்கு, ஆந்திராவிற்கு படிக்கப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். தேசிய கல்லூரியில் படித்தவர்களுக்குப் பார்த்தீர்கள் என்றால், இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலச் சட்டக் கல்லூரியில் இதுவரையில் போதுமான பேராசிரியர்களைப் போடவில்லை, Lecturer-களைப் போடவில்லை, அங்கு Law படித்துவிட்டுப் போன மாணவர்களையும், M.L., படித்துவிட்டுப் போனவர்களையும்தான் அவர்கள் Guest Lecturer-களாகப் போடுகிறார்கள். அந்த Guest Lecturer என்ற வாசகத்தையே எடுக்க வேண்டும். முழு நேர பேராசிரியர்களையும், பகுதி நேர பேராசிரியர்களையும் நியமித்து ஒரு தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இதனுடைய நோக்கம். எனவே, அதற்குண்டான வழிவகைகளைச் செய்வதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, நம்முடைய சென்னை High Court-இல் இருக்கிற Law College-இல் ஒரு கலவரம் நடந்த பிறகு, நீதியரசர்

2010 ஏப்ரல் 6]

திரு. சண்முகம் கமிஷன், U.G. Course-ஐ வெளியில் கொண்டு போக வேண்டும் என்று ஒரு பரிந்துரையைக் கொடுத்திருக்கிறது. அதாவது, P.G.-யை உள்ளே கொண்டு வரலாம், U.G.-யை வெளியில் கொண்டு போங்கள் என்று சொல்கிறார்கள். பிற நாட்டிலே எங்கேயுமே High Court-இல் Law College என்பது கிடையாது. ஆனால் தமிழகத்திலேயே, படிப்புடன்கூடிய அனுபவம் கிடைக்க வேண்டுமென்று, வெள்ளைக்காரர்கள் நமக்கு இவ்வாறு உருவாக்கிவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஆகவே, இங்கு இருக்கிற U.G.-யை வெளியேற்றக் கூடாது. அதேபோல இங்கு autonomous body-யை உருவாக்குவதற்குத் தனிச் சட்டம், வேறு மாநிலத்தில் இயற்றியதுபோல தனிச் சட்டத்தை இயற்றி, தரமான கல்வியைத் தர இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, School of Excellence in Law-இல் fees அதிகம் என்றார்கள். இல்லை; ரூ.40,000/- ரூபாய்தான் வாங்குகிறோம். ஆனால் National Law School-இல் ரூபாய் ஒரு இலட்சம் வாங்குகிறார்கள். இதையே அதிகம் என்றால் என்ன செய்ய முடியும்? இரண்டாவது, மாணவர்கள் வேலைக்குப் போவது, practice செய்வது, இவையெல்லாம் அவர்களுடைய சொந்த விருப்பம். இங்கே படித்து முடித்து வேலைக்குப் போகிறார்கள், அங்கே practice செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அது அவர்களுடைய விருப்பம். மூன்றாவது, இந்தக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் இன்னொரு கேள்வியைக் கேட்டார். இங்கு இருக்கிற Law College-ஐ மாற்றக் கூடாது என்கிறீர்கள் நீங்கள், அப்படித் தானே? Am I correct? *(குறுக்கீடு)*

திரு. தி.க. ராஜா: B.L.-ஐ நிறுத்திவிட்டு M.L.-ஐக் கொண்டு வருவதாக, அந்த கமிஷன் சொல்லியிருக்கிறது. அதுகுறித்து அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக நான் அறிகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அங்கு இருக்கிற சட்டக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றுதான் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசர்

திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் வெளிப்படையாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அங்கு கலவரம் ஏற்பட்டபோது நடைபெற்ற சம்பவம் குறித்து அறிக்கை அளித்த நீதியரசர் சண்முகம் கமிஷனும், இதைத் தெரிவித்து இருக்கிறது. அந்தக் கருத்து அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டசபையில் கலந்துகொண்டு, எனக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பு தந்த கழகத்தின் தலைவர் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், கழகத்தின் பொருளாளர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் தளபதியார் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், படித்தவர்கள் அதிகம் நிறைந்த மாவட்டம். ஏராளமான வழக்கறிஞர்கள் அங்கே இருக்கிறார்கள். அங்கு ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி அமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், எங்களுடைய மாவட்டத்தின் நிலைமையைக் கருதி, அங்கே வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்ட நீதிமன்ற வளாகம்தான் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, நாகர்கோவிலிலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் இந்த ஆண்டே கட்டுவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு சபாநாயகர்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பக்கத்தில் திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி இருக்கிறது. எனவே,

2010 ஏப்ரல் 6]

நாகர்கோவிலில் தனியாக ஒன்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது. மூன்றாவது, ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மனாபபுரம், குழித்துறை போன்ற இடங்களில் எல்லாம் இப்போது நிதி ஒதுக்கி, கட்டடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதேபோன்று நாகர்கோவிலிலும் கட்ட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது High Court-இனுடைய பரிசீலனையில் இருக்கிறது.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

கட்டட வசதி

***102833—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கடந்த 26-10-2007 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்து கருத்துரு அனுப்ப, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர், துணைப் போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி மற்றும் மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டுள்ளது. தகுந்த இடம் தேர்வு செய்து கருத்துரு வரப்பெற்றவுடன் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.